


# ஸ்ரீ சேஷ ஒளி



திருவருட்சுடர்

நிர்வாக ஆசிரியர் : குருஜி கே.வி.எல்.என். சர்மா

ஒளி - 10 காலாண்டிதழ் ஏப்ரல் - ஜூன் 2016 கதிர் - 2


# 'விதி செய்த சதியோ! வேதனையே கதியோ!'



நமது மனித வாழ்க்கையை எடுத்துக் கொண்டால் வாழ்க்கை பயணம் எப்படி இருக்கும் என்பது ஆராய்ச்சிக்குரிய விஷயம். சில அன்பர்களுக்கு சுமுகமாகவும், எளிமையாகவும் அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்க்கை கடந்து செல்கிறது. ஆனால் எல்லோருக்கும் அப்படி இருக்கிறதா? என்று சிந்தித்து பார்க்க வேண்டும். யோசித்து பார்த்தால் ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கையும் ஒரு விதமான அமைப்பில் இருக்கிறது. சில அன்பர்களுக்கு கரடு முரடாக இருக்கிறது. சில அன்பர்கள் விண்ணில் பறப்பது போன்ற உணர்வோடு வாழ்கிறார்கள். சில நபர்கள் ஆழ்கடலில் முத்து குளிப்பது போல் உணர்கிறார்கள். சில அன்பர்கள் இறைவனோடு இரண்டற கலந்த இன்ப நிலையில், வாழ்வது போன்று உணர்கிறார்கள். உண்மையிலேயே வாழவும் செய்கிறார்கள். சில அன்பர்கள் இறை நிலையில் இருப்பது போன்ற மாயத் தோற்றத்தை உருவாக்கி விடுகிறார்கள். மாயத் தோற்றத்தை உருவாக்கி கொண்டவர்கள் தன்னையும் ஏமாற்றிக் கொண்டு மக்களையும் ஏமாற்றி கொண்டிருக்கிறார்கள். இவையெல்லாம் ஏன் ஏற்படு கின்றன? எப்படி ஏற்படுகின்றன? இதற்கு பின்னால் இருக்கக்கூடிய சக்தி என்ன? சூழ்நிலை காரணமா? அல்லது பிறப்பின் தன்மை காரணமா? இதுபோன்ற விடை தெரியாத பல வினாக்கள் நமது மனத்திரையில் முன் வந்து செல்கின்றன. இதற்கு விடை கண்டுபிடிக்க நாம் முயற்சி செய்கிறோம். இதற்காக தொடர்ந்து முயற்சி செய்து கொண்டே இருக்கிறோம். இதன் விளைவாக நாம் மகான்களை நாடி செல்கிறோம். சில அன்பர்கள் கோவில் கோவிலாக சென்று வழிபாடு செய்கிறார்கள். எல்லோருக்கும் நிறைவேற வேண்டிய கோரிக்கைகள் அதிகமாக இருக்கின்றன. சிலது நிறைவேறுகிறது. சில விஷயங்கள் இறுதி மூச்சுவரை நிறைவேறுவதே இல்லை. வெற்றிகள் வந்து குவியும்போது மனதில் ஏற்படக்கூடிய உச்சகட்ட இன்பம் தொடர்ந்து நமக்கு இருக்கிறதா? என்றால் இல்லை. அதுபோன்று தொடர்ந்து தோல்விகளையே சந்தித்து கொண்டு நித்தம் நித்தம் பாலைவனத்தில் இருப்பது போன்ற ஒரு உணர்வோடு நாம் வாழ வேண்டும் என்று சொன்னால் அந்த வாழ்க்கையே நரகமாகி விடுகிறது.

வெற்றியும், தோல்வியும் ஒரு சமநிலையை அடையும் முயற்சிதான் சமச்சீர் வாழ்க்கையாக அமைய வழி வகுக்கும். அந்த சமச்சீர் நிலைமையை நாம் அடைவது நமது கையில் இருக்கிறதா? நவக்கிரஹங்களின் கையில் இருக்கிறதா? அல்லது விதி என்று சொல் கிறோமே-தலையெழுத்து என்று சொல்கிறோமே அதுதான் இந்த விளைவுகளை ஏற்படுத்துகிறதா என்று சிந்தித்து பார்க்கவேண்டும். அப்படி நாம் ஆராயும் போதுதான் இது போன்ற ஒரு அமைப்பிற்கு உண்டான காரணத்தை கண்டு பிடிக்க இயலும். அப்படி ஆராய்ந்து தோண்டிப் பார்க்கும் போது விதியின் வலிமை மிகக் கொடுமையானது. விதி வசத்தால் நமது இதிகாசங்களிலும் புராணங்களிலும் பல நிகழ்வுகள் நமக்கு இருக்கின்றன. அந்த நிகழ்வுகள் உண்மைக்கு புறம்பானது அல்ல! உதாரணத்திற்கு சொல்ல வேண்டும் என்று சொன்னால் ராமபிரான் காட்டுக்கு சென்றது விருப்பியா? அல்லது விதியின் வலிமையிலா? என்று கேட்டால் விதியின் வலிமைதான் என்று நாம் சொல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. இராவணன் சீதையை கவர்ந்து சென்றது விதிவசத்தால்தான். இறுதியில் ராமர் பட்டாபிஷேகம் செய்துகொண்டதும் அதே விதி வசத்தால்தான். இடைப்பட்ட காலத்தில் சந்தித்த பல சோதனைகள் நமது மனித வாழ்க்கைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. ''வையத்து வாழ்வாங்கு வாழ்பவர் வானுலகில் தெய்வத்துள் வைக்கப்படும்'' என்ற திருவள்ளுவர் வாக்குபடி இந்த வையகத்தில் மனிதனாக பிறந்து எப்படி தரும நீதியாக வாழவேண்டுமோ அப்படி வாழ்ந்தால் விதியின் வலிமை எவ்வளவு கொடுமையாக இருந்தாலும் அந்த வேகத்தை குறைத்து, வலிமையை குறைத்து, போராட்டத்தை நடத்தி இறுதியில் பலத்தோடு வெற்றி இலக்கை நாம் அடையலாம்.

நளன் பெரிய மகாராஜாவாக இருந்து கார்கோடகன் என்ற நாகம் சனீஸ்வரரின் பிரதிநிதியாக வந்து கடித்த காரணத்தினால் ராஜ பதவியை இழந்து சமையல் கலைஞனாக மாறினான் என்று சரித்திரம் உணர்த்துகிறது. இன்றைக்கும் சிறந்த சமையல் கலைஞர்களை நளபாகம் செய்பவர்கள் என்று நாம் பாராட்டுகிறோம். ராஜாவாக இருந்த காரணத்தினால் திறமை அப்பொழுதும் இருந்தது. சமையல் கலைஞனாக அவர் பதவி இறக்கம் பெற்ற போதும் இருந்தது. திறமை என்பது எங்கும் சென்று அழிந்து விடவில்லை. இதற்கு அடிப்படை காரணம் என்னவென்று பார்த்தால் பிறக்கும் நேரத்தில் நவக்கிரஹங்களின் நிலைமை நமது ஜாதகத்தில் எவ்வாறு அமைந்துள்ளது என்பதை பொறுத்துதான் அந்த விதியின் வேகத்தை நாம் கணக்கிடுகிறோம்.

அப்படியென்றால் விதியை மாற்ற முடியாதா? விதியை வெல்ல முடியாதா? வெல்லலாம். மாற்றலாம். விதியின் வலிமையை குறைக்கலாம். இவற்றுக்கெல்லாம் மார்க்கங்கள் உண்டு. வழிகாட்ட மகான்கள் இருக்கிறார்கள். அந்த பாதையை நாம் தேர்ந்தெடுக்க வேண்டும். அந்த பாதையில் செல்ல நமக்கு மனம் இருக்க வேண்டும் வைராக்கியம் இருக்க வேண்டும். சித்தம் இருக்க வேண்டும். இவையனைத்தும் ஒன்று சேர்ந்த ஒரு கூட்டு முயற்சியால் விதியை நாம் வெல்லலாம். அவ்வாறு முயற்சி செய்யாது விட்டோமானால் சோதனையே வாழ்க்கையாக அமைந்துவிடுகிறது. எவ்வளவு பரிகாரம் செய்தாலும் நமக்கு நிவாரணம் கிடைக்கவில்லை. ஆலயத்திற்கு சென்றாலும் நமக்கு விமோசனம் கிடைக்கவில்லை. மனம் நொந்து, உழன்று, சிதைந்து போய்விடுகிறது. ஒடிந்த நிலையிலே, சோர்ந்த நிலையிலே அடைக்கலம் இல்லாத நிலையிலே, பரிதவிக்கும் நிலையிலே, தணியாத தாகத்திலே, தவிக்கும் ஆன்மாக்களுக்காக அடைக்கலம் கொடுக்கும் ஒரே இடம் நமது 18 சித்தர் சக்திபீடம் மாடம்பாக்கத்தில் அமைந்துள்ளது. ஸத்குரு ஸ்ரீசேஷாத்ரி சுவாமிகள் அடியேனுக்கு ஆணையிட்டார்கள். தவிக்கும் மனதிற்கு திரிந்துகொண்டிருக்கும் மனதிற்கு, அலைபாய்ந்து கொண்டிருக்கும் மனதிற்கு அமைதி பூங்காவாக சிறந்த மன அமைதியை கொடுக்கும் பீடமாக இது உருவாகும், எனது நல்லாசிகள் உனக்கு உண்டு. நீ முயற்சி செய்தால் உனக்கு வெற்றி கிடைக்கும் என்று ஆசீர்வதித்தார்கள். ஆனால் விதிக்கப்பட்டிருந்த விஷயம் இன்றைய தினம் நமக்கு நடந்திருக்கிறது. இடைப்பட்ட காலத்திலே சந்தித்த சோதனைகள் வர்ணிக்க இயலாது. வார்த்தைகளால் வர்ணிக்கவே இயலாது. சோதனையும் வேதனையும் இல்லையென்றால் சாதனை எப்படி சாத்தியம்? சிந்தித்து பாருங்கள்! அப்படி இந்த பீடத்திலே விதியை மாற்றும் வித்தகர்களாக, 18 மாபெரும் சித்தர்கள் அமர்ந்திருக்கிறார்கள். அருள்பாலித்து கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமா! பரமாத்மா குருவாயூரப்பனுடன் அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகியாக பச்சைக்கல் ஸ்ரீசக்ர மகாமேரு உருவத்தில் என் அன்னை ஸ்ரீ லலிதா பரமேஸ்வரி கோலாகலமாக காட்சி அளித்து கொண்டிருக்கிறாள். இது அல்லவோ பாக்யம்! இது அல்லவோ சாதனை! அதோடு மட்டும் இன்றி சித்ரகுப்தர் இங்கு அருள்பாலித்து கொண்டிருக்கிறார். ஜாதகத்தில் எங்கெங்கோ சென்று பரிகாரம் செய்து விமோசனம் கிட்டாதவர்கள் நமது சக்தி பீடத்தில் ஒவ்வொரு பௌர்ணமியும், அமாவாசையும் நடக்கும் விசேட சித்ரகுப்தர் பூஜையில் பங்கேற்றால் விதி மாறும். வெற்றி வந்து குவியும். எல்லையில்லா மன அமைதி கிடைக்கும். நமது சக்தி பீடத்தில் பல நிகழ்வுகள் நடந்துகொண்டே இருக்கின்றன. 18 சித்தர்களும் நவகிரஹங்களின் பிரதிநிதிகளாக இருந்துகொண்டு அருள்பாலித்து கொண்டிருக்கிறார்கள். நாகதோஷ பரிகாரம், கால சர்ப்ப தோஷ பரிகாரம், ஸ்ரீ குருவாயூரப்பனுக்கு துலாபார பிரார்த்தனை, பௌர்ணமி விசேட பூஜை, அமாவாசை அருள்வாக்கு பூஜை போன்ற நிகழ்வுகள் மகானின் ஆணைப்படி நடந்து கொண்டே இருக்கின்றன. ஒரு மாபெரும் பரிகார ஸ்தலமாக விதியை மாற்றும் அற்புத பீடமாக சக்தி பீடம் காட்சியளித்து கொண்டிருக்கிறது உங்கள் விதி கண்டிப்பாக மாறும். வேதனை குறையும். சோதனை இல்லா நிலை உருவாகும். விதி செய்யும் சதியாக இருக்காது. வாழ்க்கை சோதனையாக இருக்காது. ''அன்றலர்ந்த அற்புத மலர் போல்'' என்றென்றும் புதுப் பொலிவோடு புதுமை யுகமாக சித்தர் சாம்ராஜ்யம் நமக்கு வழிகாட்டும் என்பது உறுதி. வழிபடுவோம்! வளங்களை பெறுவோம்!

-குருஜி சர்மா


ஸ்ரீ சேஷஒளியில் சந்தாதாரராகி ஸத்குருவின் திருவருள் பெறுங்கள்

சந்தா ரூ. 101/-

# பரவசம் தந்த அனுபவங்கள்

*''கருணாசாகரம் சாந்தம் அருணாசலவாசினம்
ஸ்ரீசேஷாத்ரி குரும்வந்தே பிரம்மேபூதம் தபோநிதம்''*

## "வாய்மையும் தூய்மையும்"

பெருமதிப்பிற்குரிய சேஷபக்தர்களுக்கு வணக்கம்.


வாய்மை இதற்கு பெரியோர்கள் பல அர்த்தங்கள் கூறியுள்ளார்கள். சொன்ன சொல் தவறாமல் இருப்பது, நெறி பிறழாமல் வாழ்வது, சத்தியம் காப்பது இப்படி பல. அப்படிப்பட்ட வாய்மை இருக்கும் இடத்தில் தூய்மையையும் இருக்கும் என்பது ஆன்றோர்கள் வாக்கு. ஒரு இடம் தூய்மையாக இருக்குமேயானால் அந்த இடத்தில் தெய்வம் குடி கொண்டுவிடும் என்று முன்னோர்கள் கூறியுள்ளார்கள். ஆகையால் தெய்வம் நம்மிடத்தில் குடிகொள்ள வேண்டுமானால் மனதையும் நாம் இருக்கும் இடத்தையும் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும். அகம், புறம் இரண்டும் தூய்மையாக இருக்கவேண்டும். நாம் நமது வீட்டை தினமும் கூட்டி பெருக்கி சுத்தம் செய்து வைத்துக் கொள்கிறோம். அப்பொழுதுதான் மகாலட்சுமி வீட்டில் வாசம் செய்வாள் என்று நம்புகிறோம். அதுபோலத்தான் கோவிலும். கோவிலுக்கு செல்லும் பக்தர்கள் கோவில் தூய்மையாக இருக்க உதவவேண்டும். கோவிலை சுத்தம் செய்ய உழவார பணிக்குழு பக்தர்கள் எல்லா ஊர்களிலும் சேவை செய்ய இருக்கிறார்கள். உழவாரப்பணி என்பது மூன்று அல்லது ஆறு மாதங்களுக்கு ஒரு முறை கோவில் வளாகத்தில் சேர்ந்துள்ள தேவையற்ற பொருட்கள், குப்பைகளை அகற்றுவதாகும். ஆனால் பக்தர்களாகிய நாம் கோவிலுக்கு செல்லும் போது அங்கு பிளாஸ்டிக் பைகளையோ, தேவையற்ற பொருட்களையோ போட்டுவிடாமல் அங்கு கிடக்கும் குப்பைகளை நம்மால் முடிந்த அளவு எடுத்து அங்கு வைக்கப்பட்டிருக்கும் குப்பைத் தொட்டிகளில் போடுவது மிகச் சிறந்த சேவையாகும்.

கோவிலில் வாய்மை என்பது தெய்வம். தூய்மை என்பது பக்தர்களாகிய நாம். தெய்வத்துடன் பக்தர்கள் இரண்டறக் கலக்க வேண்டுமானால் வாய்மை என்ற கோவிலை தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும். அகம், புறம் இரண்டையும் நாம் தூய்மையாக வைத்துக் கொண்டால் வாய்மை எனப்படும் தெய்வம் நம்முள் வந்து குடியேறும். வாழ்வு வளமாக மாறும். ஆகவே பக்தர்களே! நாம் அனைவரும் ஸத்குரு ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் அருளிய வாய்மை எனும் நேர்வழி நடப்போம்! தூய்மை எனும் நல்வழியில் இருப்போம்!

மீண்டும் அடுத்த இதழில் சந்திக்கிறேன்.

பணிவன்புடன்
மருதபரணி

## அகண்ட சித்தர்கள் வேள்வி 21-4-2016



சக்திபீடத்தில் ஏப்ரல் மாதம் 21 ஆம் தேதி வியாழக்கிழமை சித்ரா பௌர்ணமியன்று 18 சித்தர்கள் வேள்வி நடைபெறும். அன்பர்கள் அனைவரும் தங்கள் கைகளினாலேயே வேள்வியை செய்யலாம். கலந்துகொண்டு பலன் அடையுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**சங்கல்ப கட்டணம் ரூ. 500/-**

**SRI SESHADRI SWAMIGAL TRUST - MUMBAI OFFICE**

A-11, Room No. 8, Ground Floor, Shahid Bhagat Singh, CHS Ltd., Bindra Complex, Mahakali Caves Road, Near Holi Spirit Hospital, Andheri, Mumbai - 93. Ph : 28387116

**Mr. A.L. NARASIMHAN :**

Flat No. 301, Shiva Pooja Co-operative Housing Society, Plot No. 100, Sector-29, Vashi Navi, Mumbai-400 703.
Phone : 022-27881456, Cell : 9967553555

## சக்தி பீடத்தில் முக்கிய தினங்கள்

ஏப்ரல்

| | |
|---|---|
| 7 | அமாவாசை |
| 10 | திருமாங்கல்யத் திருநாள் |
| 13 | சக்திபீட கணபதி பிரதிஷ்டாதினம் விக்னராஜ கணபதி ஹோமம் |
| 14 | தமிழ் வருடப்பிறப்பு |
| 15 | ஸ்ரீராம நவமி |
| 20 | ஹஸ்தம் |
| 21 | சித்ரா பௌர்ணமி 18 சித்தர்கள் வேள்வி நடைபெறும் |

மே

| | |
|---|---|
| 4 | அக்னி நட்சத்திரம் ஆரம்பம் |
| 6 | அமாவாசை |
| 9 | அட்சய திருதியை |
| 17 | ஹஸ்தம் |
| 21 | பௌர்ணமி, வைகாசி விசாகம் |
| 28 | அக்னி நட்சத்திரம் நிவர்த்தி |

ஜுன்


| | |
|---|---|
| 4 | அமாவாசை |
| 14 | ஹஸ்தம் |
| 20 | பௌர்ணமி |

18 சித்தர் சக்தி பீடத்திற்கு பஸ் ரூட்
தாம்பரம் வேளச்சேரி வழியாக
ராஜ கீழ்ப்பாக்கம் வந்து தெற்கே
3 கி.மீ. சென்றால் அருள்மிகு தேனுபுரீஸ்வரர்
சிவன் கோயிலுக்கு அருகில்

**ஸ்ரீசக்ர மஹாமேரு
ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள்
18 சித்தர்கள் சக்திபீட,
பிருந்தாவனம்**
அமைந்துள்ளது.

முகவரி எண். 1, சன்னதி தெரு,
மாடம்பாக்கம், சென்னை - 600 126.
போன் : 044-22281408,
22280407, 22710972
பஸ் ரூட் : தாம்பரத்திலிருந்து 51G, 51K
தி.நகரிலிருந்து 5A Cut Service
ப்ராட்வேயிலிருந்து 83 மினி பஸ்
இறங்குமிடம் : சிவன் கோயில்

## சித்தர் சக்திபீடத்தில் விழாக்கள்



நமது சக்திபீடத்தில் சிறிய விழாக்கள் (அறுபதாம் கல்யாணம், பூணூல், சீமந்தம், வளைகாப்பு, காது குத்தல்) நடத்துவதற்குரிய ஏற்பாடுகளை அறநிலையத்தினர் செய்துள்ளனர்.

ஏழை எளியவர்களுக்கு உரிய சலுகைக் கட்டணத்தைச் செலுத்தி பயனடையுங்கள். எங்கு நடத்துவது, எப்படி செய்வது என்று குழப்பம் அடைய வேண்டாம்.
விவரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண். 94440 26969
(செயலாளர் அறக்கட்டளை)

# ராசி பலன்கள்

## அனைவருக்கும் தமிழ் புத்தாண்டு நல்லாசிகள்

## ஏப்ரல் - ஜூன் 2016

### மேஷம்



(அஸ்வினி, பரணி, கார்த்திகை முதல் பாதம்)

**ஏப்ரல் 2016**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் பலம் பொருந்தி சஞ்சரிக்கிறார். இருப்பினும் சனிபகவானோடு சஞ்சரிக்கிறார். குருவின் பலம் கூடியிருப்பதால் திருமணத் தடை அகலும். காதல் கை கூடும். திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் நடக்கும். கணவன் மனைவி உறவு நல்லமுறையில் இருக்கும். சில அன்பர்களுக்கு கிரகப்பிரவேசம் செய்யும் யோகம் உண்டு. பணியாளர்களுக்கு பதவி உயர்வு, சம்பள உயர்வு கிடைக்கும். எதிர்பாராத திருப்பம் ஏற்படும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் கடன் வியாபாரத்தை தவிர்த்தால் அதிக லாபம் அடையலாம். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். எதிர்பாராத வெளிநாட்டு பிரயாணம் அவர்களுக்கு ஏற்படும். பெண்களுக்கு புதிய ஆடை, ஆபரணங்கள் சேரும். கலைஞர்களுக்கு எதிர்பாராத நட்பின் மூலம் புதிய பதவி கிடைக்கும். அரசியல்வாதிகள் எச்சரிக்கையுடன் செயல்படுவது நல்லது. விவசாயிகளுக்கு மாதம் முற்பகுதியில் நல்ல லாபம் கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும். பங்கு மார்க்கெட்டில் முதலீடு செய்வதை தவிர்ப்பது நல்லது.

*அதிர்ஷ்ட எண். 9, நிறம் : பவழம், கிழமை : செவ்வாய், திசை : தெற்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஆஞ்சநேயர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ காகபுஜண்டர் சித்தர், அகப்பேய் சித்தர், கிழமை : வியாழன். சந்திராஷ்டம தினங்கள் : 23 முதல் 26 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**மே**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 8ம் இடத்தில் சனியோடு சஞ்சரிக்கிறார். அஷ்டமச் சனியின் ஆதிக்கம் உள்ளது. பிரயாணத்தின்போது கவனம் தேவை. திருமணத் தடை அகலும். காதல் கைகூடும். பணியாளர்களுக்கு அயல்நாட்டு பிரயாணம் ஏற்பட வாய்ப்புண்டு. வியாபாரிகள், தொழிலதிபர்கள் எதிர்பாராத லாபம் அடைவார்கள். மாணவர்களுக்கு அயல்நாடு செல்லும் யோகம் தெரிகிறது. பெண்கள் குடும்ப குதூகலத்தில் ஈடுபடுவார்கள். கலைஞர்களுக்கு எதிர்பாராத பணவரவு ஏற்படும். அரசியல்வாதிகள் அரசாங்கத்தால் புதிய பதவிகளை அடைவார்கள். விவசாயிகளுக்கு நல்ல லாபம் ஏற்படும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும். அஷ்டமச் சனி யிருப்பதால் பரிகாரம் தேவை.

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஸ்ரீஆஞ்சநேயர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ காகபுஜண்டர் சித்தர், அகப்பேய் சித்தர், கிழமை : வியாழன். சந்திராஷ்டம தினங்கள் : 21 முதல் 23 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**ஜூன்**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 8ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். சனீஸ்வர பகவான் 8ம் இடத்தில் இருக்கிறார். குருவினுடைய பார்வை ஏற்பட்டுள்ளது. பேச்சில் நிதானம் கவனம் தேவை. கணவன், மனைவி விட்டுக் கொடுத்து பழகுதல் நலம். காதல்- திருமணம் கைகூடும். தந்தை மகன் உறவில் விரிசல் ஏற்பட இடமுண்டு. பணியாளர்கள் பண விஷயத்தில் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். வியாபாரிகள் கடன் வியாபாரத்தை தவிர்ப்பது நல்லது. மாணவர்கள் கல்வியில் நல்ல மதிப்பெண் பெறுவார்கள். பெண்களுக்கு மர்ம உறுப்புகளில் சங்கடம் ஏற்படும். கலைஞர்களுக்கு எதிர்பாராத உடல் நல பாதிப்பு உண்டு. அரசியல்வாதிகள் திடீர் விபத்துகளுக்கு உள்ளாவார்கள். விவசாயிகளுக்கு ஓரளவு லாபம் கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் முற்பகுதி ஓரளவு நல்ல பலன்களே இருக்கும்.

*அதிர்ஷ்ட எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஸ்ரீ ஆஞ்சநேயர், ஸ்ரீஐயப்பன், சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : கருவூரார் சித்தர், கபிலர் சித்தர், கிழமை : சனிக்கிழமை, சந்திராஷ்டம தினங்கள் : 17 முதல் 19 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

### ரிஷபம்



(கார்த்திகை 2, 3, 4, பாதம் ரோகிணி, மிருகசீரிஷம் 1, 2 பாதம்)

**ஏப்ரல் 2016**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் கேது பகவானோடு சஞ்சரிக்கிறார். பதவியில் குழப்பம் ஏற்படும். பணியாளர்கள் எச்சரிக்கையுடன் வேலை செய்யவேண்டும். கணவன், மனைவி உறவு சாதாரணமாக இருக்கும். பணப் பிரச்சனை ஏற்பட்டு குடும்பஸ்தர்களுக்கு தீரும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் அவசர முடிவுகளை எடுக்க வேண்டாம். பண நெருக்கடி ஏற்பட இடமுண்டு. மாணவர்கள் படிப்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும். பெண்களுக்கு குறிப்பாக வேலை செய்யும் பெண்களுக்கு வேலை பளு கூடும். கலைஞர்கள் அயல்நாட்டு பிரயாணத்தின் மூலம் அதிக லாபம் அடைவார்கள். அரசியல்வாதிகளுக்கு சிக்கல் ஏற்படும். கூட்டாளிகளுடன் எச்சரிக்கையுடன் பழகவேண்டும். விவசாயிகளுக்கு ஓரளவு லாபம் ஏற்படும். பொதுவாக இந்த மாதம் சுமாரான மாதமாகவே அமையும். பரிகாரங்கள் செய்தால் நல்ல பலன்கள் கிடைக்கும்.

*அதிர்ஷ்ட எண். 1, நிறம் : ரோஸ், கிழமை : ஞாயிறு, திசை : கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஸ்ரீகுருவாயூரப்பன், புதன்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ பாம்பாட்டி சித்தர், அழுகணி சித்தர், கிழமை : ஞாயிறு, ராகு காலம். சந்திராஷ்டம தினங்கள் : 26 முதல் 28 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**மே**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். ராஜயோகம் ஏற்பட்டு இருப்பதால் பணப்புழக்கம் சுமாராக இருக்கும். நாகதோஷம் ஏற்பட்டுள்ளதால் எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். பணியாளர்களுக்கு திடீர் இடமாற்றம் ஏற்படும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் பங்கு சந்தையில் முதலீடு செய்ய வேண்டாம். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். கணவன், மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். பெண்களுக்கு மனமகிழ்ச்சி ஏற்படும். அயல்நாட்டு பிரயாணம் கலைஞர்களுக்கு ஆதாயம் கொடுக்கும். அரசியல்வாதிகளின் கணவன், மனைவி உறவில் சிக்கல் ஏற்படும். விவசாயிகள் ஓரளவு லாபம் அடைவார்கள். பொதுவாக இந்த மாதம் சுமாரான பலன்கள் கொடுக்கும்.

*அதிர்ஷ்ட எண். 1, நிறம் : ரோஸ், கிழமை : ஞாயிறு, திசை : கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஸ்ரீநாகராஜர், ஞாயிறு, ராகுகாலம், வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ மகாபோகர் சித்தர், புலிப்பாணி சித்தர், கிழமை : செவ்வாய். சந்திராஷ்டம தினங்கள் : 23 முதல் 25 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**ஜூன்**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் ஆட்சி பலமடைந்துள்ளார். ராசியில் சூரியன் சஞ்சரிக்கிறார். உடல் நலத்தில் உஷ்ண ஆதிக்கம் ஏற்படும் கவனம் தேவை. பணப்புழக்கம் சுமாராக இருக்கும். செலவுகளும் கட்டுக்கடங்காமல் போகலாம். பண நிர்வாகத்தில் கவனம் தேவை. கணவன் மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். திருமணம் கைகூடும். பணியாளர்களுக்கு மனமகிழ்ச்சி ஏற்படும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் புதிய முயற்சியில் ஈடுபட வேண்டாம். மாணவர்களுக்கு எதிர்பாராத நல்ல தகவல் வரும். பெண்கள் ஆடை, ஆபரண சேர்க்கையை பெறுவார்கள். கலைஞர்களுக்கு நல்ல ஆதாயம் கிடைக்கும். அரசியல்வாதிகளின் கணவன், மனைவி உறவில் சிக்கல் ஏற்படும். விவசாயிகள் ஓரளவு லாபம் அடைவார்கள். பொதுவாக இந்த மாதம் ஓரளவு நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஸ்ரீராஜராஜேஸ்வரி அம்மன், செவ்வாய்க்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : பாம்பாட்டி சித்தர், அழுகணி சித்தர், கிழமை : ஞாயிற்றுக்கிழமை, ராகுகாலம். சந்திராஷ்டம தினங்கள் : 19 முதல் 21 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

### மிதுனம்



(மிருகசீரிஷம் 3, 4 பாதம் திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 பாதம்)

**ஏப்ரல் 2016**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 10ம் இடத்தில் நீசம் அடைந்துள்ளார். இருந்தாலும் ராஜயோகம் ஏற்பட்டுள்ளது. கணவன், மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். சில அன்பர்களுக்கு வீடு வாங்கும் யோகம் உண்டு. இருப்பினும் பொருளாதார விஷயத்தில் கவனத்துடன் செயல்பட வேண்டும். பணியாளர்களுக்கு பெரிய சிரமங்கள் ஏற்படாது. என்றாலும் நிதானத்துடன் இருக்கவேண்டும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் ஓரளவு லாபம் அடைவார்கள். மாணவர்கள் நிதானத்தை கடைபிடித்தால் அதிக மதிப்பெண்கள் பெறலாம். பெண்களுக்கு மனத்திற்கினிய சம்பவம் நடக்கும். கலைஞர்கள் அயல்நாட்டு தொடர்பின் மூலம் அதிக லாபம் அடைவார்கள். அரசியல்வாதிகளுக்கு எதிரிகளால் ஆபத்து உண்டு. எச்சரிக்கை! விவசாயிகளுக்கு ஓரளவு லாபம் கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் ஓரளவு நல்ல பலன்களே கொடுக்கும்.

*அதிர்ஷ்ட எண். 2, நிறம் : வெள்ளை, கிழமை : திங்கள், திசை : தென்மேற்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஸ்ரீகுருவாயூரப்பன், புதன்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ [illegible] சித்தர், [illegible] சித்தர், கிழமை : வெள்ளி. சந்திராஷ்டம தினங்கள் : 1 முதல் 3 தேதி வரை, 28 முதல் 30 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**மே**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். பணியாளர்களுக்கு பதவி உயர்வு ஏற்படும். திருமணத் தடை அகலும். கணவன், மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் அதிக லாபம் அடைவார்கள். கடல் வாணிபம் கை கொடுக்கும். மாணவர்கள் உயர்கல்வியில் நல்ல மதிப்பெண், கௌரவம் அடைவார்கள். பெண்கள் எதிர்பாராத அயல்நாட்டு பிரயாணத்தில் திளைப்பார்கள். கலைஞர்களுக்கு அன்னிய தேசத்தால் லாபம் உண்டு. அரசியல்வாதிகள் எதிரிகளின் சூழ்ச்சியில் சிக்குவார்கள். எச்சரிக்கை! விவசாயிகளுக்கு சுமாரான பலன்கள் கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் பிற்பகுதியில் ஓரளவு நல்ல பலன்களே நடக்கும்.

*அதிர்ஷ்ட எண். 1, நிறம் : ரோஸ், கிழமை : ஞாயிறு, திசை : கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : முருகப் பெருமான், செவ்வாய்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ மகாபோகர் சித்தர், புலிப்பாணி சித்தர், கிழமை : செவ்வாய். சந்திராஷ்டம தினங்கள் : 25 முதல் 28 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**ஜூன்**

மாத ஆரம்பத்தில்உங்கள் ராசிநாதன் லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். குருவின் பார்வை ஏற்பட்டுள்ளது. நினைத்தது நிறைவேறும். பணப்புழக்கம் திருப்திகரமாக இருக்கும். கணவன், மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். பணியாளர்களுக்கு பணமுடக்கம் ஏற்பட இடமுண்டு. வியாபாரிகள், தொழிலதிபர்கள் பங்கு சந்தையில் முதலீடு செய்ய வேண்டாம். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். பெண்களுக்கு வீண் அவப்பெயர்களுக்கு இடம் உண்டு. கவனம் தேவை. சின்னத்திரை கலைஞர்கள் ஆதாயம் அடைவார்கள். அரசியல்வாதிகள் பிரயாணத்தின்போது எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. விவசாயிகளுக்கு பணப்பிரச்சனை தீரும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : மகாலஷ்மி, வெள்ளிகிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ மகாபோகர் சித்தர், புலிப்பாணி சித்தர், கிழமை : செவ்வாய். சந்திராஷ்டம தினங்கள் : 22 முதல் 24 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

### கடகம்



(புனர்பூசம் 4ம் பாதம், பூசம், ஆயில்யம்)

**ஏப்ரல் 2016**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் ரோக ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். உடல் நலத்தில் கவனம் தேவை. எதிர்பாராத மருத்துவ செலவு ஏற்படும். கணவன், மனைவி உறவு திருப்திகரமாக இருக்கும். பணியாளர்களுக்கு பதவி உயர்வு, சம்பள உயர்வு கிடைக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் நல்ல லாபம் அடைவார்கள். பெண்களுக்கு வெளிநாட்டு பிரயாணம் ஏற்படும். கலைஞர்கள் பண விஷயத்தில் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். அரசியல்வாதிகள் ஓரளவு சொத்து சேர்க்கையில் ஈடுபடுவார்கள். விவசாயிகளுக்கு நல்ல லாபம் கிடைக்கும். இருப்பினும் நகை விஷயத்தில் கவனம் தேவை. அடமானம் வைத்த நகைகளை விரைவில் மீட்டு விடுவது பலன் தரும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஸ்ரீகுருவாயூரப்பன், புதன்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : வள்ளலார் சித்தர், இடைக்காடர் சித்தர், கிழமை : புதன். சந்திராஷ்டம தினங்கள் : 3 முதல் 5 தேதி வரை, 30 மே 3 வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**மே**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் கேந்திர ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். குடும்ப ஸ்தானத்தில் குருபகவான் இருக்கிறார். ஆகையால் சுபநிகழ்வுகள் குடும்பத்தில் ஏற்படும். எதிர்பாராத திருமணம் கைகூடும். நல்ல தகவல்கள் கிடைக்கும். கணவன், மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். பேச்சில் கவனம் தேவை. பணியாளர்களுக்கு மனதிற்கினிய சம்பவம் நடக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் அதிக லாபம் அடைவார்கள். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் ஏற்படும். பெண்களுக்கு ஆடை, ஆபரண சேர்க்கை ஏற்படும். கலைஞர்கள் கடல் பிரயாணத்தின் மூலம் லாபம் அடைவார்கள். அரசியல்வாதிகளுக்கு குழந்தைகளால் ஆதாயம் உண்டு. விவசாயிகளுக்கு கடன் தொல்லை தீரும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : சக்திபிட கணபதி, சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ அழுகணி சித்தர், பாம்பாட்டி சித்தர், கிழமை : ஞாயிறு. சந்திராஷ்டம தினங்கள் : 28 முதல் 30 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**ஜூன்**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் பாக்ய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். விபரீத ராஜ யோகம் ஏற்பட்டுள்ளது. குடும்பஸ்தானத்தில் குருபகவான் இருப்பதால் சுபநிகழ்வுகள் குடும்பத்தில் ஏற்படும். காதல்- திருமணம் கைகூடும். கணவன் மனைவி வாக்குவாதத்தில் ஈடுபட வேண்டாம். பணியாளர்களுக்கு பணவரவு கூடும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் நல்ல லாபம் அடைவார்கள். மாணவர்களுக்கு அயல்நாடு செல்லும் யோகம் தெரிகிறது. வேலை செய்யும் பெண்களுக்கு தொழிலில் பதவி உயர்வு கிடைக்கும். சின்னத்திரை இசைக் கலைஞர்கள், தொழில் நுட்பக் கலைஞர்கள் நல்ல லாபம் அடைவார்கள். அரசியல்வாதிகளுக்கு புதிய வீடு வாங்கும் யோகம் உண்டு. விவசாயிகளுக்கு நிவாரணத் தொகை கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் அதிகமான சுபநிகழ்வுகள் குடும்பத்தில் நடக்கும்.

*அதிர்ஷ்ட எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஸ்ரீதட்சிணாமூர்த்தி, வியாழக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : கருவூரார் சித்தர், கபிலர் சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 24 முதல் 26 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**குருஜி கே.வி.எல்.என். சர்மா**

## சிம்மம்



(மகம், பூரம், உத்திரம் 1ம் பாதம்)

**ஏப்ரல் 2016**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 9ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். இராசியிலேயே குரு பகவான் ராகுவுடன் சஞ்சரிக்கிறார். இருந்தாலும் ராஜ யோகம் ஏற்பட்டுள்ளதால் எதிர்பாராத பணவரவு ஏற்படும். கணவன், மனைவி உறவில் சிறுசிறு சலனம் ஏற்பட்டு விலகும். காதல் விஷயத்தில் கவனம் தேவை. அவசரப்படவேண்டும். பணியாளர்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். மேலதிகாரிகளை பகைத்துக் கொள்ள வேண்டாம். வியாபாரிகள், தொழிலதிபர்கள் ஓரளவு கவனத்துடன் செயல்பட்டால் நஷ்டத்தை தவிர்க்கலாம். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். கலைஞர்களுக்கு அன்னிய தேசப் பிரயாணம் உண்டு. அரசியல்வாதிகள் பேச்சில் கவனத்துடன் இருக்கவேண்டும். விவசாயிகள் மாதம் பிற்பகுதியில் ஓரளவு லாபம் அடைவார்கள். பொதுவாக இந்த மாதம் சமாரான மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 2, நிறம் : வெண்மை, கிழமை : திங்கள், திசை : தென்மேற்கு, வழிபட வேண்டிய கடவுள் : சக்திபீட கணபதி, சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : கஞ்சமலை சித்தர், சென்னிமலை சித்தர், கிழமை : வெள்ளி. சந்திராஷ்டம தினங்கள் : 5 முதல் 7 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**மே**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் உச்சமடைந்துள்ளார். குருவின் பார்வை ஏற்பட்டுள்ளது. நீண்ட நாள் தடைப்பட்ட விஷயங்கள் அனுகூலமாக மாறும். கணவன், மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். திருமணத் தடை அகலும். பணியாளர்களுக்கு எதிர்பாராத நல்ல தகவல் வரும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் நல்ல லாபம் அடைவார்கள். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். பெண்கள் நகை விஷயத்தில் கவனத்துடன் இருப்பது நல்லது. சின்னத்திரை கலைஞர்கள் எதிர்பாராத லாபம் அடைவார்கள். அரசியல்வாதிகளுக்கு புதிய பதவி கிடைக்கும். விவசாயிகளுக்கு அரசாங்கத்தால் ஆதாயம் உண்டு. பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : சக்திபீட கணபதி, சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ பாம்பாட்டி சித்தர், அகப்பேய் சித்தர், கிழமை : ஞாயிறு. ராகுகாலம், சந்திராஷ்டம தினங்கள் : 3 முதல் 5 தேதி வரை, 30 தேதி முதல் ஜூன் 1ம் தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**ஜூன்**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 10ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். சுக்கிர பகவான் ஆட்சியடைந்துள்ளார். இருப்பினும் ஜென்ம குருவும், விபரீத ராஜயோகமும் மனதில் மனக் கவலைகளை ஏற்படுத்தும். கணவன், மனைவி உறவு வழக்கம் போல் இருக்கும். பணியாளர்கள் பங்கு மார்க்கெட்டில் முதலீடு செய்யவேண்டாம். வியாபாரிகள், தொழிலதிபர்கள் கடன் வியாபாரத்தை தவிர்ப்பது நல்லது. மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். பெண்களுக்கு உறவினர்களால் குதூகலம் ஏற்படும். கலைஞர்கள் எதிர்பாராத நட்பின்மூலம் ஆதாயம் அடைவார்கள். அரசியல்வாதிகளுக்கு மருத்துவச் செலவு ஏற்படும். விவசாயிகள் மாத பிற்பகுதியில் ஓரளவு லாபம் அடைவார்கள். பண விஷயத்தில் கவனமாக இருந்தால் இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஸ்ரீ தட்சணாமூர்த்தி, வியாழக் கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ சட்டைமுனி சித்தர், குதம்பை சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 26 முதல் 28 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

## கன்னி



(உத்திரம் 2, 3, 4 பாதம், ஹஸ்தம், சித்திரை 1, 2 பாதம்)

**ஏப்ரல் 2016**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் நீசமடைந்துள்ளார். எதிலும் எங்கும் கவனத்துடன் இருக்க வேண்டும். சுப விரய ஸ்தானத்தில் குருபகவான் இருப்பதால் குடும்பத்தில் சுப காரியங்கள் நடக்கும். திருமணம், பூப்புனிதம், கிரஹப்பிரவேசம் போன்ற நிகழ்வுகள் நடக்கும். கணவன், மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். பணியாளர்களுக்கு புனித பயணம் மேற்கொள்ள நேரிடலாம். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு ஆடை, ஆபரணம், சொத்துச் சேர்க்கை ஏற்படும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். பெண்களுக்கு மாதவிடாய் கோளாறினால் பாதிப்பு உண்டு. மருத்துவச் செலவுகள் ஏற்படும். கலைஞர்களுக்கு தொழிலில் புதிய நட்பின் மூலம் ஆதாயம் உண்டு. அரசியல்வாதிகளுக்கு மன மகிழ்ச்சி ஏற்படும். விவசாயிகள் கௌரவிக்கப்படுவார்கள். பொதுவாக இந்த ராசி அன்பர்களுக்கு இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 2, நிறம் : வெண்மை, கிழமை : திங்கள், திசை : தென்மேற்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஸ்ரீகுருவாயூரப்பன், புதன் கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ காக புஜண்டர் சித்தர், அகப்பேய் சித்தர், கிழமை : வியாழன். சந்திராஷ்டம தினங்கள் : 7 முதல் 9 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**மே**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 8ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். பாஸ்கர யோகமும், சௌபாக்யலக்ஷ்மி யோகமும், ராஜயோகமும் ஏற்பட்டுள்ளது. இது ஒரு நல்ல அதிருஷ்டமாகும். நீண்ட நாள் தடைபட்ட விஷயங்கள் அனுகூலமாக மாறும். நினைப்பது நிறைவேறும். கணவன், மனைவி உறவு திருப்திகரமாக இருக்கும். பணியாளர்களுக்கு எதிர்பாராத நல்ல தகவல் கிடைக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் நல்ல லாபம் அடைவார்கள். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். பெண்களுக்கு கணவனை சார்ந்தவர்களின் மூலம் லாபம் உண்டு. கலைஞர்கள் கௌரவிக்கப்படுவார்கள். அரசியல்வாதிகளுக்கு இளைய சகோதர சகோதரிகளால் தொல்லை ஏற்படும். விவசாயிகள் பரிவர்த்தனை விஷயத்தில் கவனமாக செயல்பட வேண்டும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 2, நிறம் : வெண்மை, கிழமை : திங்கள், திசை : தென்மேற்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஸ்ரீதட்சிணாமூர்த்தி, வியாழக் கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ காகபுஜண்டர் சித்தர், அகப்பேய் சித்தர், கிழமை : வியாழக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 5 முதல் 7 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**ஜூன்**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 9ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். சுப விரயஸ்தானத்தில் குரு பகவான் ராகுவோடு சஞ்சரிக்கிறார். திடீர் வரவுகளும், திடீர் செலவுகளும் குடும்பத்தில் ஏற்படும். காதல்- திருமணம் கைகூடும். பணியாளர்களுக்கு எதிர்பாராத நல்ல தகவல் வரும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் கடன் வியாபாரத்தை தவிர்க்கலாம். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். பெண்களுக்கு மனமகிழ்ச்சி ஏற்படும். கலைஞர்களுக்கு மருத்துவச் செலவுக்கு இடமுண்டு. அரசியல்வாதிகள் நிலத்தகராறில் ஈடுபட வேண்டாம். விவசாயிகளுக்கு நிலப்பிரச்சனை தீரும். பொதுவாக இந்த மாதம் பிற்பகுதியில் நல்ல பலன்களையே தரும்.

*அதிர்ஷ்ட எண். 2, நிறம் : வெண்மை, கிழமை : திங்கள், திசை : தென்மேற்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஸ்ரீராஜராஜேஸ்வரியம்மன், செவ்வாய்க்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ காகபுஜண்டர் சித்தர், அகப்பேய் சித்தர், கிழமை : வியாழன். சந்திராஷ்டம தினங்கள் : 1 முதல் 3 தேதி வரை, 28ம் தேதி முதல் ஜூலை 1ம் தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

## துலாம்



(சித்திரை 3, 4 பாதம், சுவாதி, விசாகம் 1, 2, 3, பாதம்)

**ஏப்ரல் 2016**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 5ம் இடத்தில் கேதுவுடன் சஞ்சரிக்கிறார். மனதில் குழந்தைகளை உத்தேசித்து குழப்பம் ஏற்படும். அவர்களுடைய படிப்பு விஷயத்தில் கலக்கம் உங்களுக்கு ஏற்படும். கணவன், மனைவி வாக்குவாதத்தில் ஈடுபட வேண்டாம். திருமணத் தடை அகலும். பணியாளர்களுக்கு சம்பள உயர்வு கிடைக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் கடல் வாணிபத்தின் மூலம் லாபம் அடைவார்கள். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். பெண்களுக்கு ஆண்களால் கணவனைத் தவிர தொல்லைகள் ஏற்படும். எச்சரிக்கை. கலைஞர்களுக்கு புதிய தொடர்பின் மூலம் லாபம் உண்டு. அரசியல்வாதிகளுக்கு எதிர்பாராத பணவரவு ஏற்படும். விவசாயிகள் நல்ல லாபம் அடைவார்கள். பொதுவாக இந்த ராசி அன்பர்களுக்கு இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும். இருப்பினும் பண முதலீட்டு விஷயத்தில் கவனத்துடன் செயல்படுவது நல்லது.

*அதிர்ஷ்ட எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஸ்ரீராஜகாளியம்மன், செவ்வாய்க்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : காகபுஜண்டர் சித்தர், அகப்பேய் சித்தர், கிழமை : வியாழன். சந்திராஷ்டம தினங்கள் : 9 முதல் 11 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**மே**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் கேந்திர ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். லாபஸ்தானத்தில் குருபகவான் இருக்கிறார். திருமணம் கைகூடும். காதல் நிறைவேறும். கணவன், மனைவி உறவு சுமுகமாக இருக்கும். பணியாளர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் நல்ல லாபம் அடைவார்கள். மாணவர்களுக்கு பணஉதவியுடன் வெளிநாட்டு பிரயாணம் கிடைக்கும். பெண்கள் மனமகிழ்ச்சி அடைவார்கள். கலைஞர்களுக்கு புதிய நட்பின் மூலம் ஆதாயம் உண்டு. அரசியல்வாதிகள் குடும்பத்தில் சிக்கல் ஏற்பட்டு விலகும். விவசாயிகள் நல்ல லாபம் அடைவார்கள். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : நாகராஜர், ஞாயிற்றுக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : கருவூரார் சித்தர், கபிலர் சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 7 முதல் 9 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**ஜூன்**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 8ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். வாக்குஸ்தானத்தில் சனிபகவான் ஏழரை சனியாக உள்ளார். பேச்சில் கவனம் தேவை. குடும்பத்தில் சிறு சிறு சலனங்கள் ஏற்பட்டு விலகும். கணவன், மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். பணியாளர்களுக்கு திடீர் பணவரவு ஏற்படும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் ஜாமீன் கையெழுத்து போட வேண்டாம். மாணவர்களுக்கு கல்வியில் சிறு சிறு தடை ஏற்பட்டு விலகும். கலைத்துறையை சேர்ந்த பெண்களுக்கு நல்ல லாபம் கிடைக்கும். வெள்ளித் திரைக் கலைஞர்கள் புதிய நட்போடு பழகும்போது அரசியல்வாதிகளுக்கு பிள்ளைகளால் தொல்லை ஏற்படும். விவசாயிகளுக்கு ஓரளவு லாபம் கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் சுமாரான மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஆஞ்சநேயர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ கருவூரார் சித்தர், கபிலர் சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 3 முதல் 5 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

## விருச்சிகம்



(விசாகம் 4ம் பாதம், அனுஷம்,கேட்டை )

**ஏப்ரல் 2016**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் பலம்பெருந்தி சஞ்சரிக்கிறார். ஆகையால் நினைத்த காரியம் நிறைவேறும். பணியாளர்களுக்கு தொழிலில் சலனம் ஏற்பட்டு விலகும். இடமாற்றத்திற்கு முயற்சி செய்ய வேண்டாம், வழக்கம்போல் பணிகளை மேற்கொண்டால் போதுமானது. வியாபாரிகள், தொழிலதிபர்கள் அவசர முடிவுகளை எடுக்காமல் நிதானத்தை கடைபிடித்தால் நஷ்டத்தை தவிர்க்கலாம். மாணவர்களுக்கு அயல்நாட்டு பிரயாணம் ஏற்பட இடமுண்டு. பெண்களுக்கு புதிய இடம் வாங்கும் யோகம் உண்டு. கலைஞர்கள் தொழிலில் அபிவிருத்தி அடைவார்கள். அரசியல்வாதிகளுக்கு சகோதரர்களால் குழப்பம் ஏற்படும். விவசாயிகளுக்கு ஓரளவு லாபம் கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் சுமாரான மாதமாகவே அமையும். சற்று கவனத்துடன் செயல்பட்டால் விபத்துக்களைத் தவிர்க்கலாம்.

*அதிர்ஷ்ட எண். 9, நிறம் : பவழம், கிழமை : செவ்வாய், திசை : தெற்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஸ்ரீகுருவாயூரப்பன், புதன்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : இடைக்காடர் சித்தர், வள்ளலார் சித்தர், கிழமை : புதன். சந்திராஷ்டம தினங்கள் : 11 முதல் 14 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**மே**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் ஆட்சியடைந்துள்ளார். 10ம் இடத்தில் குருபகவானும், ஏழரை சனியின் பாதிப்பும் தெரிகிறது. ஆகையால் நிதானத்தை கடைபிடிக்க வேண்டும். பணியாளர்கள், அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். கணவன், மனைவி விட்டுக் கொடுத்து பழகுதல் நலம் தரும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் கடல் வாணிபத்தில் லாபம் அடைவார்கள். மாணவர்களுக்கு எதிர்பாராத அரசாங்க உதவி கிடைக்கும். பெண்களுக்கு வெளிநாட்டிலிருந்து பண உதவி கிடைக்கும். அரசியல்வாதிகள் அரசாங்கத்தால் தண்டிக்கப்படுவார்கள். விவசாயிகள் ஓரளவு லாபம் அடைவார்கள். பொதுவாக இந்த மாதம் பிற்பகுதியில் ஓரளவு நல்ல பலன்களை கொடுக்கும்.

*அதிர்ஷ்ட எண். 9, நிறம் : பவழம், கிழமை : செவ்வாய், திசை : தெற்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஸ்ரீ தட்சிணாமூர்த்தி, வியாழக் கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : காகபுஜண்டர் சித்தர், அகப்பேய் சித்தர், கிழமை : வியாழன். சந்திராஷ்டம தினங்கள் : 9 முதல் 11 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**ஜூன்**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் ஆட்சியடைந்துள்ளார், விபரீத ராஜயோகம் உங்களுக்கு ஏற்பட்டுள்ளது. 10ம் இடத்தில் குருபகவான் சஞ்சரிப்பதால் எதிலும், எங்கும் எச்சரிக்கையாக நீங்கள் இருக்கவேண்டும். பணியாளர்கள் நிதானத்தை கடைபிடிக்க வேண்டும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் புதிய முதலீடு செய்ய வேண்டாம். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். பெண்களுக்கு மர்ம ஸ்தானங்களில் கோளாறுகள் ஏற்பட்டு மருத்துவச் செலவு ஏற்படும். சின்னத் திரை கலைஞர்கள் லாபம் அடைவார்கள். அரசியல்வாதிகளுக்கு பித்ருராஜ்ய சொத்துக்களில் குழப்பம் ஏற்படும். விவசாயிகள் அரசாங்க விஷயத்தில் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். பொதுவாக இந்த மாதம் சாதாரண மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 2, நிறம் : வெண்மை, கிழமை : திங்கள், திசை : தென்மேற்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஸ்ரீதட்சிணாமூர்த்தி, வியாழக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ காகபுஜண்டர் சித்தர், அகப்பேய் சித்தர், கிழமை : வியாழன். சந்திராஷ்டம தினங்கள் : 5 முதல் 7 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

## தனுசு

(மூலம், பூராடம், உத்திராடம் 1ம் பாதம் )



ஏப்ரல் 2016

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் பாக்கியஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். மனதில் மகிழ்ச்சி கூடும். திருமணத் தடை அகலும். காதல் கைகூடும். கணவன், மனைவி உறவு திருப்திகரமாக இருக்கும். பணியாளர்களுக்கு வருமானம் கூடும். வியாபாரிகள் தொழிலதிபர்கள் அதிக லாபம் அடைவார்கள். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். பெண்களுக்கு மனதில் எதிர்பாராத பிரமை ஏற்படும். கலைஞர்களுக்கு சின்னத்திரை ஆதாயம் கொடுக்கும். அரசியல்வாதிகள் சொத்துச் சேர்க்கையில் ஈடுபடுவார்கள். விவசாயிகளுக்கு மனநிறைவு ஏற்படும். பொதுவாக இந்த மாதம் பிற்பகுதியில் நல்ல பலன்களே ஏற்படும்.

*அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ராஜகாளியம்மன், ஞாயிற்றுகிழமை, ராகுகாலம், வழிபட வேண்டிய சித்தர்கள் : சதுரகிரி சித்தர், சென்னிமலை சித்தர், கிழமை : வெள்ளி. சந்திராஷ்டம தினங்கள் : 14 முதல் 16 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

மே

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் பாக்கிய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். விபரீத ராஜ யோகம், ராஜயோகம் ஏற்பட்டுள்ளது. எதிர்பாராத செலவுகள், பணவரவு ஏற்படும். பணியாளர்கள், பங்குச் சந்தையில் முதலீடு செய்ய வேண்டாம். வியாபாரிகள், தொழிலதிபர்கள் பண விஷயத்தில் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். அரசாங்கத்தால் வருமானவரித் துறையினால் பாதிக்கப்படுவார்கள். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் அடைவார்கள். பெண்களுக்கு பொருள் சேர்க்கை ஏற்படும். இசைக் கலைஞர்கள், தொழில்நுட்பக் கலைஞர்கள் நல்ல வருமானம் பெறுவார்கள். அரசியல்வாதிகள் நிலத்தகராறில் ஈடுபட வேண்டாம். விவசாயிகளுக்கு ஓரளவு லாபம் கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் எதிர்பாராத நல்ல பலன்களை கொடுக்கும்.

*அதிர்ஷ்ட எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஆஞ்சநேயர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : காகபுஜண்டர் சித்தர், அகப்பேய் சித்தர், கிழமை : வியாழக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 11 முதல் 13 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

ஜுன்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 9ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். ஏழரை சனியின் பாதிப்பு உண்டு. பிரயாணத்தின்போது கவனம் தேவை. பணியாளர்கள் திறனத்தை கடைபிடிக்க வேண்டும். மருத்துவர்கள் நல்லபலன் தரும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் ஓரளவு லாபம் அடைவார்கள். பொறியியல் கல்லூரி மாணவர்கள் முன்னேற்றம் காண்பார்கள். பெண்களுக்கு குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். வெள்ளித்திரை கலைஞர்களுக்கு நல்ல லாபம் கிடைக்கும். அரசியல்வாதிகள் வேலைதேடியை தவிர்க்க வேண்டும். விவசாயிகளுக்கு கொடுக்கல் வாங்கல் பிரச்சனை தீரும். பொதுவாக இந்த மாதம் பிற்பகுதியில் நல்ல பலன்களே ஏற்படும்.

*அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஸ்ரீ ஆஞ்சநேயர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : கருவூரார் சித்தர், கபிலர் சித்தர், கிழமை : சனிக்கிழமை, சந்திராஷ்டம தினங்கள் : 7 முதல் 10 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

## மகரம்

(உத்திராடம் 2, 3, 4 பாதம், திருவோணம், அவிட்டம் 1,2 பாதம்)



ஏப்ரல் 2016

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். விபரீத ராஜ யோகமும், ராஜயோகமும் ஏற்பட்டுள்ளது. ஆகையால் அயல்நாட்டு பிரயாணம் ஆதாயம் தரும். கணவன், மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். பணியாளர்கள் ஓரளவு பதவியில் முன்னேற்றம் காண்பார்கள். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு கடல் வாணிபம் லாபம் தரும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். பெண்களுக்கு குடும்பத்தில் சிறு சிறு குழப்பங்கள் ஏற்பட்டு அகலும். கலைஞர்கள் அயல்நாட்டு பிரயாணத்தால் அதிக லாபம் அடைவார்கள். அரசியல்வாதிகளுக்கு வட நிகழ்வுகள் ஏற்படும். விவசாயிகள் ஓரளவு லாபம் அடைவார்கள். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 9, நிறம் : பவழம், கிழமை : செவ்வாய், திசை : தெற்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஸ்ரீகுருவாயூரப்பன், புதன்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ சதுரகிரி சித்தர், சென்னிமலை சித்தர், கிழமை : வெள்ளி. சந்திராஷ்டம தினங்கள் : 16 முதல் 18 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

மே

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். ராஜயோகமும், விபரீத ராஜயோகமும் ஏற்பட்டுள்ளது. கடல் கடந்து சென்று சுகங்களை அனுபவிக்கும் யோகம் உண்டு. பணியாளர்களுக்கு பணவரவு திருப்திகரமாக இருக்கும். வியாபாரிகளுக்கு, தொழிலதிபர்களுக்கு லாபம் கூடும். மாணவர்கள் ஆழ்ந்த கவனத்துடன் படித்தால் மதிப்பெண் கூடும். கணவனால் பெண்களுக்கு ஆதாயம் உண்டு. கலைஞர்கள் கௌரவிக்கப் படுவார்கள். அரசியல்வாதிகளுக்கு அரசாங்கத்தால் ஆதாயம் உண்டு. விவசாயிகளுக்கு கடன் தொல்லை தீரும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 1, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஸ்ரீதட்சிணாமூர்த்தி, வியாழக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ காகபுஜண்டர் சித்தர், அகப்பேய் சித்தர், கிழமை : வியாழக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 13 முதல் 16 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

ஜுன்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 11ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். பண விஷயத்தில் கவனம் தேவை. விபரீத ராஜயோகம் ஏற்பட்டிருக்கிறது. எதிர்பாராத பண வரவும் உண்டு. செலவும் உண்டு. பணியாளர்கள் அதிக எச்சரிக்கையுடன் பணியாற்ற வேண்டும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் அதிக லாபம் அடைவார்கள். சிறு சிறு தடை ஏற்பட்டாலும் மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். பெண்களுக்கு குழந்தைகளால் மகிழ்ச்சி ஏற்படும். சின்னத்திரை கலைஞர்கள் குறிப்பாக நாட்டில் கலைஞர்கள் நல்ல லாபம் அடைவார்கள். அரசியல்வாதிகளுக்கு கடன் நிவாரணம் ஏற்படும். விவசாயிகளுக்கு புதிய நிலம் வாங்கும் யோகம் உண்டு. பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஸ்ரீ தட்சிணாமூர்த்தி, வியாழக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : கலைகோவை சித்தர், புலிப்பாணி சித்தர், கிழமை : செவ்வாய்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 10 முதல் 13 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

## கும்பம்

(அவிட்டம் 3,4, பாதம், சதயம் பூரட்டாதி 1,2,3 பாதம்



ஏப்ரல் 2016

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 10ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். குருவின் பலமும் கூடி இருப்பதால் நிர்வாகத் திறமை பளிச்சிடும். காதல்-திருமணம் கைகூடும். பணியாளர்கள் பதவிமாற்றம் பெற்று சம்பள உயர்வைப் பெறுவார்கள். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு அதிக லாபம் கிட்டும். மாணவர்கள் சற்று கவனத்துடன் படித்தால் நல்ல மதிப்பெண் பெறலாம். அலட்சிய பாவம் கூடாது. பெண்களுக்கு அயல்நாட்டு பிரயாணம் ஆதாயம் தரும். இசைக் கலைஞர்களுக்கு புதிய நட்பு பணவரத்தைக் கூட்டும். அரசியல்வாதிகள் சகோதரர்களின் சூழ்ச்சியில் அகப்படுவார்கள். விவசாயிகள் ஓரளவு லாபம் அடைவார்கள். பொதுவாக இந்த மாதம் பிற்பகுதியில் நல்ல பலன்களே ஏற்படும்.

*அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : நாகராஜர், ஞாயிற்றுக்கிழமை, ராகு காலம், வழிபட வேண்டிய சித்தர்கள் : அழுகணி சித்தர், பாம்பாட்டி சித்தர், கிழமை : ஞாயிறு. சந்திராஷ்டம தினங்கள் : 18 முதல் 21 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

மே

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 10ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். நிர்வாகத் திறமை கூடும். பணியாளர்களுக்கு பதவி உயர்வு, சம்பள உயர்வு கிடைக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் நல்ல லாபம் அடைவார்கள். மாணவர்கள் கல்வியில் நல்ல முன்னேற்றம் காண்பார்கள். பெண்களுக்கு ஆடை, ஆபரணச் சேர்க்கை ஏற்படும். கலைஞர்களுக்கு அயல்நாட்டு பிரயாணத்தின் மூலம் லாபம் அடைவார்கள். அரசியல்வாதிகள் சொத்துச் சேர்க்கையில் ஈடுபடுவார்கள். விவசாயிகளுக்கு ஓரளவு நல்ல லாபம் கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : நாகராஜர், ஞாயிற்றுகிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : சட்டைமுனி சித்தர், குதம்பை சித்தர், கிழமை : வெள்ளி. சந்திராஷ்டம தினங்கள் : 16 முதல் 18 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*


ஜுன்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 10ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். வாக்கு ஸ்தானத்தில் உள்ள சந்திரன் பலத்தைக் கொட்டுவார். திடீர் திருமணங்கள் ஏற்படும். காதல் கைகூடும். பணியாளர்கள் பதவி உயர்வு, சம்பள உயர்வு பெறுவார்கள். வியாபாரிகள், தொழிலதிபர்கள் நல்ல லாபம் அடைவார்கள். மாணவர்களுக்கு மதிப்பெண்கள் கூடும். பெண்களுக்கு புதிய ஆபரண சேர்க்கை ஏற்படும். கலைஞர்கள் மனமகிழ்ச்சி அடைவார்கள். அரசியல்வாதிகளுக்கு நிர்வாகத்தில் நல்ல பெயர் கிடைக்கும். விவசாயிகள் மாத பிற்பகுதியில் நல்ல லாபம் அடைவார்கள். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஸ்ரீ தட்சிணாமூர்த்தி, கிழமை : வியாழன், வழிபட வேண்டிய சித்தர்கள் : கருவூரார் சித்தர், கபிலர் சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 13 முதல் 15 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

## மீனம்

(பூரட்டாதி 4ம்பாதம் உத்திரட்டாதி, ரேவதி)



ஏப்ரல் 2016

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் ரோக ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். உடல் நலத்தில் கவனம் செலுத்துவது நல்லது. நிதானத்தை கடைபிடித்தால் கணவன், மனைவி உறவு திருப்திகரமாக இருக்கும். பணியாளர்கள் அவசர முடிவுகள் எடுக்கவேண்டாம். இடமாற்றத்திற்கு முயற்சி செய்ய வேண்டாம். வியாபாரிகள், தொழிலதிபர்கள் சூழ்ச்சியில் அகப்பட வாய்ப்புண்டு. ஆகையால் ஊழியர்களிடம் எச்சரிக்கையுடன் பழக வேண்டும். மாணவர்கள் ஓரளவு முன்னேற்றம் காண்பார்கள். பெண்களுக்கு மருத்துவச் செலவுகள் ஏற்பட இடமுண்டு. கலைஞர்கள் கடல் பிரயாணத்தின்மூலம் லாபம் அடைவார்கள். அரசியல்வாதிகளுக்கு பித்ரு ராஜ்ஜிய சொத்தில் குழப்பம் ஏற்பட்டு அகலும். விவசாயிகளுக்கு கடன் தொல்லை ஏற்பட்டு நிவாரணம் கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் சுமாரான மாதமாகவே அமையும். பரிகாரம் செய்து கொள்வது பலன் தரும்.

*அதிர்ஷ்ட எண். 3, நிறம் : வெள்ளை, கிழமை : திங்கள், திசை : தென்மேற்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஸ்ரீசக்ரமஹாமேரு, ஞாயிற்றுகிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ காகபுஜண்டர் சித்தர், அகப்பேய் சித்தர், கிழமை : வியாழன், சந்திராஷ்டம தினங்கள் : 21 முதல் 23 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

மே

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 6ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். பொருளாதார சிக்கல் ஏற்படலாம். கவனம் தேவை. மருத்துவச் செலவுகளுக்கு இடமுண்டு. கணவன், மனைவி உறவு வழக்கம் போல் இருக்கும். பணியாளர்கள் புதிய முயற்சியில் ஈடுபட வேண்டாம். வியாபாரிகள், தொழிலதிபர்கள் ஓரளவு லாபம் அடைவார்கள். மாணவர்களுக்கு எதிர்பாராத பொருள் உதவி கிடைக்கும். பெண்களுக்கு குடும்பத்தில் குதூகலம் கூடும். வெள்ளித் திரை கலைஞர்கள் வெளிநாடு செல்வார்கள். அரசியல்வாதிகள் அரசாங்கத்தால் கௌரவிக்கப் படுவார்கள். விவசாயிகளுக்கு நிவாரணம் கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் பிற்பகுதியில் ஓரளவு நல்ல பலன்களே நடக்கும்.

*அதிர்ஷ்ட எண். 1, நிறம் : ரோஸ், கிழமை : ஞாயிறு, திசை : கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : சக்திவிட கணபதி, சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ காகபுஜண்டர் சித்தர், அகப்பேய் சித்தர், கிழமை : வியாழக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 28 முதல் 31 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

ஜுன்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 6ம் இடத்தில் ராகுவோடு சஞ்சரிக்கிறார். பண முடக்கம் ஏற்படலாம். எச்சரிக்கை. பணியாளர்கள் சக ஊழியர்களுக்காக ஜாமீன் கையெழுத்து போட வேண்டாம். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு ஓரளவு லாபம் கிடைக்கும். மாணவர்களுக்கு எதிர்பாராத வெளிநாட்டு பிரயாணம் ஏற்படும். பெண்களுக்கு புதிய நட்பின் மூலம் ஆதாயம் உண்டு. கலைஞர்கள் அரசாங்கத்தால் கௌரவிக்கப்படுவார்கள். அரசியல்வாதிகளுக்கு எதிரிகளால் தொல்லை ஏற்படும். விவசாயிகள் மாத முற்பகுதியில் ஓரளவு லாபம் அடைவார்கள். பொதுவாக இந்த மாதம் முற்பகுதியில் நல்ல பலன்களைத் தரும்.

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஸ்ரீதட்சிணாமூர்த்தி, வியாழக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் காகபுஜண்டர் சித்தர், அகப்பேய் சித்தர், கிழமை : வியாழக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 15 முதல் 17 தேதி வரை, முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**கடந்த ஜனவரி மாதம் மகான் ஸத்குரு ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகளின்
மகா ஆராதனை விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. திரளான பக்தர்கள் கலந்துகொண்டனர்.
அன்னதானமும் வீதியுலாவும் நடைபெற்றன.**



சுவாமி, அம்பாள் திருக்கல்யாண காட்சி



திருக்கல்யாணத்திற்கு அம்பாளை அழைத்து வரும் காட்சி



திருக்கல்யாண வைபவத்தில் சீர்கொண்டு வரும் காட்சி



வீதியுலா காட்சி



ராகு கேது பெயர்ச்சி ஹோம காட்சிகள்



திரளான பக்தர்கள்

***18 சித்தர்கள் பற்றிய மற்ற விவரங்களுக்கு அறக்கட்டளையின் வெளியீடான
பூஜை முறை புத்தகத்தை வாங்கி படித்து பலன் அடையுங்கள்***

# குருவின் ஆசிகள்

குருநாதரின் பாத கமலங்களுக்கு அனேக கோடி சாஷ்டாங்க நமஸ்காரம். நாங்கள் (என்பது என் குடும்பத்தினர்) குருநாதரின் பக்தர்கள் ஆனதிலிருந்து எங்கள் குடும்பத்தில் எவ்வளவோ முன்னேற்றங்கள் நடந்திருக்கின்றன. அவரை தஞ்சம் அடைந்த வரை அவர் கை விடுவதே இல்லை. சோதித்து பார்ப்பதிலும் அவர் வல்லவர். சோதனை இருப்பினும் நாம் அவரையே சரணடைந்தால் அதிலும் நம்மை அவர் வெற்றி பெற செய்து அவரே வழியும் காட்டி விடுவார் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை. என் மகன்கள் நல்ல வேலையில் அமர்ந்து மேன்மேலும் வாழ்க்கையில் பரிமளிக்க அவர் எவ்வளவோ வழிகாட்டியுள்ளார். எங்களுடைய சஷ்டி அப்த பூர்த்திக்கு குருநாதருக்கு பத்திரிகை கொடுத்து அழைத்து ஆசீர்வதிக்குமாறு அழைத்தார்கள். எங்கள் மகன்கள் அவரிடம் பிரார்த்தித்தார்கள். அவரும் வருவதாக ஒப்புக் கொண்டார். அதற்கேற்றாற்போல் விழாவில் அட்சதை ஆசீர்வாதம் செய்யும் போது 4 பேர் எங்களுக்கு தெரியாதவர்கள் வந்து ஆசீர்வாதம் செய்து சென்றார்கள் எங்களுக்கு அது மிகப் பெரிய பாக்கியமாகும். அதன்பின் எல்லோரையும் அந்த 4 பேரை நீங்கள் பார்த்தீர்களா? என்று கேட்டதற்கு யாரும் பார்க்கவில்லை என்று சொல்லிவிட்டார் கள். குருநாதர் நாங்கள் வருவோம் என்று சொன்ன வார்த்தையை நடத்தி காட்டினார். அவரை முழுமையாக நம்பி சரணடைந்தால் எல்லா செல்வமும் தந்து அருள்புரிவார் என்பது சத்தியமான வாக்கு. நம்பினார் கெடுவதில்லை.

-பத்மா அபிராமன்

## பசு மடம்



பக்தர்கள் அனைவரும் பசுமடத்தை தரிசித்து பசு பராமரிப்புக்கு/தீவனத்திற்கு தாராளமாய் நிதியுதவி அளியுங்கள்.

பதினென் சித்தர் சக்தி பீடத்திலுள்ள கோமாதாக்களில் ஒன்றை தத்தெடுத்து கோதானம் செய்யலாம்.

**விபரங்களுக்கு : 044- 24938734, 24953793**

**கோமாதாவை பராமரிக்க நிதிதனை அள்ளித் தாருங்கள்.**

## டிரஸ்டின் வெளியீடுகள்

1. ஸ்ரீசக்ர மகாமேரு 18 சித்தர்கள் சக்திபீட பிருந்தாவன ஸ்தல வரலாறு (தமிழ், ஆங்கிலம்)
2. மகான் திருவுருவம் பதித்த டாலர், பேனாக்கள் மற்றும் சிறிய, பெரிய படங்கள்
3. ஸ்ரீ சக்ர மஹாமேரு ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் 18 சித்தர்கள் பூஜை முறைகள்
4. ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் மகாத்மியம் (தமிழ், ஆங்கிலம்)
5. The Glory of Sakthi Peetam
6. ஸ்ரீ கிரஹலட்சுமி (வாஸ்து தோஷம் போக்கும் படம்)
7. ஸ்ரீசேஷாத்ரி ஸ்வாமிகள் (அபூர்வ படம்)
8. ஸ்ரீ சக்ர மஹாமேரு ஸத்குரு பதினென் சித்தர் சக்திபீடம் (அபூர்வ படம்)
9. ஸ்ரீ சக்ர மஹாமேரு அம்பிகை பதினென் சித்தர் சக்திபீடம் (அபூர்வ படம்)
10. ஸத்குருவும் சக்தி பீடத்தின் மஹிமையும்

**விக்னராஜ கணபதி ஹோமம்**
**13-4-2016 புதன்கிழமை**

சக்திபீட கணபதி பிரதிஷ்டாதினத்தை முன்னிட்டு விக்னராஜ கணபதி ஹோமம் சக்திபீட பாலாலயத்தில் சிறப்பாக நடைபெறவுள்ளது. ஹோமத்திற்கு தேவையான பொருட்களை அளித்து சக்திபீட கணபதியின் அருளைப் பெறுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**சங்கல்ப கட்டணம்**
**ரூ. 100/-**



# குருநாதர் மகிமை!

குருஜி கே.வி.என்.எல். சர்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி குருநாதர் ஸ்ரீசேஷாத்ரி சுவாமிகளை 35 வருடங்களாக நாங்கள் ஆராதித்து வணங்கி வருகிறோம். எனது மகனும், மகளும் குருநாதரால் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்.

எனது மகன் குருநாதரிடம் அளவற்ற பக்தி உடையவன். அவரைப் பிரார்த்தப் பிறகே அன்றைய பணிகளை தொடங்குவான் அவன் +2 தேர்வு முடிந்து, நுழைவுத் தேர்வின் போது கடுமையான காய்ச்சலினால் அவதிப்பட்டபோது குருஜியின் ஆசீர்வாதத்தாலும் குருநாதரின் அருளாலும் அதிக மதிப்பெண்கள் பெற்று அண்ணா பல்கலைக் கழகத்திலேயே படிப்பு முடித்ததும் தொடர்ந்து அமெரிக்காவில் எவ்வித செலவுமின்றி ஸ்காலர்ஷிப் உயர்படிப்பு படித்ததையும் ஏற்கனவே சேஷ குடும்பத்தில் பகிர்ந்து கொண்டுள்ளோம். அவனுக்கு திருமணமாகி ஒரு பெண் மகவோடு யு.எஸ்.ஸில் சந்தோஷமாக வாழ்ந்து வருகிறான்.

நமது குருநாதரது அற்புதங்கள் அதிசயமானது, ஆச்சரியமானது, ஆனந்தமானது வியக்கத்தக்கது. தகுந்த தருணத்தில் தனது குழந்தைகளின் திறமைகளை வெளியே கொணர்ந்து அவர்களது வாழ்க்கையினை நல்வழிப்படுத்துவார், வளப்படுத்துவார். அதற்கு எடுத்துக்காட்டாக எனது மகன் வாழ்க்கையில் அண்மையில் நடந்த சம்பவத்தினை பகிர்ந்து கொள்வதை குருநாதர் கொடுத்த வாய்ப்பாக கருதுகிறேன்.

எனது மகன் அமெரிக்காவில் இரண்டாண்டு காலமாக ஒரு பெரிய கம்பெனியில் மற்றுமொரு கம்பெனி மூலம் இஞ்சினியரிங் கன்சல்ட்டேஷன் கொடுத்து வந்துக் கொண்டிருந்தான். அந்த பெரிய கம்பெனியில் இன்டர்வியூ அட்டென்ட் செய்து அதில் வெற்றி பெற்று அதற்குரிய வாய்ப்புக் கடிதத்தையும் பெற்றான். ஆனால் அவனுக்கு அப்பதவி திருப்தி அளிக்காததால் அவன் அந்த வேலையில் சேரவில்லை.

அந்தப் பெரிய கம்பெனியின் உயர் அதிகாரி வியப்படைந்து அப்பணியில் சேராததற்கு காரணத்தினை எனது மகனிடம் கேட்டார். அவன் தனது எண்ணத்தினை தெரிவித்தான். எனது மகனின் திறமையினை அந்த நிறுவனம் நன்கு அறிந்ததால் ஒரு உயர் பதவியினை ஏற்படுத்தி கொடுத்தார்கள். அவனும் குருநாதரின் அருளால் அப்பெரிய கம்பெனியில் அண்மையில் அப்பதவியில் பணியேற்றுள்ளான்.

நமது குருநாதர் தனது குழந்தைகளின் திறமைகளை வளர்த்து, தக்கத் தருணத்தில் இவ்வுலகுக்கு வெளிக்கொணர்ந்து அவர்களது வாழ்க்கையில் எல்லாம் செல்வங்களையும் பெற அருள்புரிவார் என்பது உறுதி. இதுவே நமது குருநாதரின் மகிமை.

குருநாதர் திருவடி சரணம்

ஸத்குரு ஸ்ரீசேஷாத்ரி சுவாமிகள் திருவடி சரணம்.

**N. சுவாமிநாதன்**
**சென்னை.**

# மனமகிழ்ச்சி

"செல்வம் நிறைய சேகரித்து வைத்திருந்தும் அதில் கொஞ்சம் தருமத்திற்காக செலவு செய்ய மனமில்லாதவனுடைய செல்வமானது, அவனது பிற்கால சந்ததியர்களால் பலவாறு சிதற அடிக்கப்பட்டுவிடும். ஆனால் தரும சிந்தனை உள்ளவனது குடும்பமானது அப்போது மனமகிழ்ச்சியில் திளைத்துக் கொண்டிருக்கும்.



## அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்

அன்பார்ந்த
சேஷ ஒளி வாசகர்களே

மூன்று மாதத்திற்கு ஒரு முறை பிரசுரமாகும், சேஷ ஒளியைப் படித்து விட்டீர்களா? உங்களுடைய கருத்துக்களை எங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம். குறை இருந்தால் திருத்திக் கொள்வோம். நிறை இருந்தால் மகிழ்ச்சி அடைவோம். ஸத்குருவின் அருளை அனுபவித்த அன்பர்கள், தங்களுடைய அனுபவங்களை எங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் பலரும் அறியும் வண்ணம், சேஷ ஒளியிலும் வெளியிடுவோம். தங்கள் பாஸ்போர்ட் சைஸ் போட்டோவுடன், அனுப்புங்கள்.


ஸ்ரீ சேஷ ஒளி

அனுப்ப வேண்டிய முகவரி :
பழைய எண். 21/3, புதிய எண். 43, அலமேலு மங்காபுரம்,
மயிலாப்பூர், சென்னை 600 004.
தொலைபேசி : 04424938734, 24953793, 9445232505

# ஸ்ரீ வள்ளலார் சித்தர்

**பதினாறு போற்றிகள்**

1. ஜோதி தரிசனம் செய்பவரே போற்றி!
2. மூவுலகத்திலும் சஞ்சரிப்பவரே போற்றி!
3. விபூதி அபிஷேகப்ரியரே போற்றி!
4. அமிர்தப்ரியரே போற்றி!
5. சிவதாண்டவப்ரியரே போற்றி!
6. ப்ரணவத்தின் விளக்கமே போற்றி!
7. முருகனோடு ஐக்கியமானவரே போற்றி!
8. ஒருநிலைப்பட்ட மனதை உடையவரே போற்றி!
9. தீயகனவுகளில் இருந்து காப்பவரே போற்றி!
10. மாயையை அகற்றுபவரே போற்றி!
11. சித்தசுத்தி உடையவரே போற்றி!
12. வெள்ளை வஸ்திரம் தரிப்பவரே போற்றி!
13. சிவபிம்பத்தை தரிசிப்பவரே போற்றி!
14. கமலப்ரியரே போற்றி!
15. தேவ ஒளியே போற்றி!
16. சகல ஐஸ்வர்யங்களையும் அளிக்கும் சர்வஒளி உருவான ஸ்ரீ வள்ளலார் சித்தர் ஸ்வாமியே போற்றி! போற்றி!

# கோமாதா

"அன்னை யார்" என்னும் வினாவிற்கு தமது ப்ரசேனாத்தர ரத்னமாலிகா என்னும் அரிய நூலில் ஜகத்குரு ஸ்ரீ ஆதிசங்கரர் "பசுவே" என்று பதில் அளித்திருக்கிறார். உலகிலுள்ள எல்லாப் பிராணிகளும் தத்தம் குழந்தைகளுக்கு பால் அளிக்க, பசு மட்டும்தான் கன்றுக்குட்டிக்கு மட்டுமல்லாமல், உலகில் உள்ள அனைத்து மனிதர்களுக்கும் பால் சுரந்து அருளுகிறது. இதனால் நம் சகலர்க்கும் அது அன்னையே ஆகும்.

பசுவினுடைய பால் 'அமிர்தம்', அந்தணர் வேள்விக்கும் ஆண்டவனது பூஜைக்கும் உரியது. கோமாதாவினுடைய திவ்ய தேகத்தில் ஸகல தேவதைகளும் ஸ்திரமாக வாசம் செய்கின்றனர். 'மந்திரமாவது' என்று புகழப்படும் சிவசின்னமான விபூதி தோன்றுவதற்கு, மூலப்பொருளான கோமயம் (சாணம்) அளிப்பது பசுவே அன்றோ! கோமாதாவிற்கு செய்யப்படும் சகல உபசாரத்தையும் தேவி தனக்குச் செய்ததாகவே ஏற்று வரம் அளிப்பாள். பசுமடத்தில் செய்யப்படும் ஜபத்திற்கு பன்மடங்கு புண்ணியம் கிட்டும் என்பது ஆன்றோர் வாக்கு. அது மட்டுமல்ல, பசுமடத்தை சுத்தம் செய்பவரது உடலில், வியாதிகள் நெருங்காது பிணிகள் அகலும்.



ஆகவே இத்தகைய மேன்மை பொருந்திய கோமாதாக்கள் கூடியிருக்கும் பதினெண் சித்தர் சக்திபீட பிருந்தாவனத்தின் பசுமடத்தில் உள்ள பசுக்களை பராமரிக்கவும், பேணி காக்கவும், பக்தர்கள் அனைவரும் தங்களால் இயன்ற உதவிகளை நல்க வேண்டும். பசுக்களை நாம் போற்றி வணங்கும்பொழுது, நம் வாழ்வில் ஐஸ்வர்யமும், ஆரோக்கியமும், ஆனந்தமும் பொங்கிப் பெருகும் என்பது திண்ணம்.

- உமாபரணி

## ஸ்ரீ சேஷ ஒளி

திருவருட்கூடர்

நிர்வாக ஆசிரியர்
குருஜி கே.வி.எஸ்.என். சர்மா

வெளியீட்டாளர்
திரு. கே. ராமசுப்ரமணியன்

உதவி ஆசிரியர்
திருமதி. என். ஜானகி

கௌரவ ஆசிரியர்கள்
திரு. மதுரபாரதி
திருமதி. உமாபரணி

அலுவலக உதவியாளர்
திருமதி. பி. லக்ஷ்மி

வடிவமைப்பு
திருமதி. பிரேமா

பதிவு அலுவலகம்
ப.எண். 21/3, பு.எண். 43,
அலமேலு மங்காபுரம்,
மயிலாப்பூர், சென்னை – 600 004.
போன் : 04424938734, 24953793
இணைய தளம் : www.seshadri.info
Email: guruji@seshadri.info

## ஸ்ரீ சேஷ ஒளி
விளம்பர கட்டண விபரம்

| | | |
|---|---|---|
| முழு பக்கம் | ரூ. 5,000 | (கறுப்பு/ வெள்ளை) |
| 1/2 பக்கம் | ரூ. 2,500 | (கறுப்பு/ வெள்ளை) |
| 1/4 பக்கம் | ரூ. 1,250 | (கறுப்பு/ வெள்ளை) |
| இரு பத்தி | ரூ. 500 | |
| ஒரு பத்தி | ரூ. 250 | |

# அறக்கட்டளையின் இதர சமூக நற்பணிகள்

பால் விநியோகம் : பிரதி ஞாயிறு தோறும் சக்திபீட பாலாலயத்தில் குழந்தைகளுக்கு பால் விநியோகம் நடைபெறுகிறது. இந்த அரிய கைங்கர்யத்தில் கலந்து கொள்ள விரும்பும் அன்பர்கள் ரூ. 500 செலுத்தி தாங்களே நேரில் வந்து கொடுக்கலாம்.

**இதனால் ஏற்படும் பலன்கள் :**

குழந்தைகள் நன்றாகப் படித்து அதிக மதிப்பெண்கள் பெறுவார்கள்.

தேர்வு சமயத்தில் ஏற்படும் வீண் பயம் நீங்கி மனத் தெளிவு ஏற்படும்.

தீராத வியாதிகள் தீரும், சித்தர்கள் அருள் கிடைக்கும்.

இலவச பால் விநியோகத்திற்கு நன்கொடை அளித்து ஸ்ரீ கிருஷ்ணனின் அருளையும் மகானின் அருளையும் சித்தர்களின் அருளையும் பெறுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

நித்திய அன்னதானம் : சக்தி பீடத்தில் நித்திய அன்னதானம் வழங்கப்படுகிறது. அன்னதானம் ரூ. 2000 வடை பாயசத்துடன் சிறப்பு அன்னதானம் ரூ. 2500 நன்கொடைகளுக்கு வருமான வரிவிலக்கு 80G உண்டு.



தானத்தில் சிறந்தது அன்னதானம்
அன்னதானம் செய்வோம்
ஆனந்தம் அடைவோம்